(திரு. ரா. உமாநாத் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் தெளிவாக இருக்கின்றது. இரண்டாவது கேள்வியை உங்களுக்கு அனுமதிப்பது சரி. அதற்காக ஒன்றுமே இல்லாமல் கேட்பது சரியல்ல.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அந்த ரிப்போர்ட்டை அரசுக்குக் கொடுத்து நீண்ட நாட்கள் ஆகின்றன. அதைப் பரிசீலனை செய்து அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் இவ்வளவு டிலே ஆகிறது. அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாலே எழுப்பிய வினாவிலே சொன்னார்கள். இந்த விசாரணை மற்ற சிறைகளிலே உள்ள நிலைமைகளை எல்லாம் சரிப்படுத்தக்கூடிய அளவுக்கு உறுதுணையாக அமையும் என்ற பொருளிலே, அங்கும் பதட்ட நிலை இருக்கின்றது என்றும் சொன்னார்கள். எனவேதான் இந்த நிகழ்ச்சி பற்றிய விசாரணை என்று குறுகிய அளவுக்கு மட்டும் இல்லாமல் ஆழ்ந்து ஆராய்ந்து அந்த அடிப்படையில் இதுபோன்ற சம்பவம் மீண்டும், ''பிரிவென்டிவ் மெஷர்ஸ்'' தடுப்பு நடவடிக்கைகள் என்னென்ன செய்யலாம் என்பது பற்றியும் அரசு ஆய்வு செய்ய வேண்டுமென்ற காரணத்தால்தான், அதை ஆய்வு செய்வதற்கு சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் 4, 5 தினங்களுக்கு சுற்றாணை முடிந்த பிறகு அடுத்த தொடர் கூட்டத்திலே இந்த அவைக்கு அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயக் கடன் ரத்து சலுகை.

*வினா எண் 405: திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடன் ரத்து சலுகை 5 ஏக்கருக்குக் குறைவானவர்களுக்கு என்று அரசு அறிவித்துள்ளது கடன் பெற்ற விவசாயியின் தற்பொழுது உள்ள நிலவுடமை கணக்குப்படியா?

(ஆ) ஆம் என்றால் கர்ணம் சான்றிதழ் கோரப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) கடன் வழங்கிய தேதியில் உள்ள நிலஉடமைக் கணக்குப்படி கடன் ரத்து சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1981 மார்ச் 6]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள கடன் நிவாரணச் சட்டத்தில் 5 ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை அல்லது 25,000 சொத்து மதிப்புள்ளவர்களுக்குக் கடன் நிவாரணச் சட்டத்தில் சலுகை தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 25,000 ரூபாய் என்று எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பது தெரியாமல் ஒவ்வொரு கோர்ட்டிலும் தங்களுக்குத் தகுந்த மாதிரி தீர்ப்பாகி இருக்கிறது. எனவே எந்த முறையில் அது நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்பதைப் பற்றி அரசு கைட்'லைன் கொடுத்துள்ளது என்பதை அறிவிக்கவேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி இருக்கிற மூல வினா வேறு, தற்போது எழுப்பி இருக்கிற வினா வேறாகவும் இருக்கின்றது. கடன் நிவாரணச் சட்டம் என்பது வேறு; விவசாயிகளுக்காக கடனை ரத்து செய்து அரசு எடுத்த நடவடிக்கை என்பது வேறு. கடன் நிவாரணச் சட்டத்திலே நில உடமை என்பது வேறு ஒரு அளவாகவும் விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்வதில் நில அளவு வேறு ஒரு அளவாகவும் அரசு மேற்கொண்டு இருக்கிறது. காரணம் நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இதிலே சில மாறுதல்கள் இருக்கின்ற காரணத்தால் நில அளவு சிறு விவசாயிகளைப் பொறுத்த வரைக்கும் எந்த அளவாக இருக்கவேண்டும் என்பதை ஒரு ஆய்வு செய்து ஒரே சீராக இருக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

செல்வி வி. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலம் உள்ள சிறு விவசாயிகள், கர்ணம்களால் 5 ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களாகக் காட்டப்பட்டதால், பல சிறு விவசாயிகள் கடன் தள்ளுபடி ஆகாமலேயே இருக்கின்றது. அது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், அவர்களுடைய கடன்களை தள்ளுபடி செய்ய ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கருக்குக்கீழ் நிலம் உள்ளவர்கள் சிறு விவசாயிகள் என்று அரசு தெரிவித்திருக்கிறது. 5 ஏக்கர் நிலம் வைத்திருந்தபோதிலும் அவர்கள் பெருவிவசாயிகள் என்று கணக்குப்பிள்ளைகளால் தவறாக சேர்க்கப்பட்டிருந்தால். மாண்புமிகு உறுப்பினர் அதை அரசுக்குத் தெரிவிப்பாரானால் அரசு கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன் ரத்து செய்யப்படுகிறபோது, 5 ஏக்கர் என்கிற அளவிலே கடன் ஆஸ்திப் பொறுப்பிலே கொடுக்கப்பட்டு இருக்கிற நிலம் என்கிற அளவிலே தான் பெரும்பாலான இடங்களில் தள்ளுபடி செய்யப்பட்டு

இருப்பது அரசுக்குத் தெரியுமா? அடுத்து, அதே போல் கூட்டுறவுக் கடன் பெற்றுள்ளவர்கள் அரசு ஊழியர்களாக இருந்து, இரண்டு பேரும் கணவன்-மனைவி சேர்ந்து ஆண்டுக்கு ரூ. 12,000-க்கு மேல் கிட்டத்தட்ட வருமானம் உள்ளவர்களும் 5 ஏக்கர் சலுகையை அனுபவிக்கிறார்களே, இவைகளை எல்லாம் விளக்கி அரசு ஆணைகள் வெளியிடப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசு முடிவு எடுத்தபோது விவசாயிகளுடைய நில அளவை மட்டும்தான் கணக்கில் எடுத்ததே ஒழிய அவர்களுடைய இதர வருமானத்தைக் கணக்கில் எடுக்கவில்லை. இதர வருமானத்தைக் கணக்கில் எடுத்து அறிவிப்பு செய்வது என்றால் சில ஆண்டுகள் ஆகிவிடும் என்கிற காரணத்தால் குறுகிய காலத்தில் ஒரு ஆய்வினை செய்கிற அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத்து நடைமுறையில் 5 ஏக்கருக்குக் கீழே உள்ள விவசாயிகள் சிறு விவசாயிகள் என்று கணக்கிட்டு, அந்த அறிவிப்பை அரசு செய்தது.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்குக் கடன் ரத்து செய்யப்பட்டு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள். ஏற்கனவே 5 ஏக்கர் நிலம் உள்ளவர்கள், தங்கள் வயிறைப் பட்டினி போட்டுக் கொண்டு, அந்தக் கடன் தொகையில் ஒரு பங்கைக் கட்டியிருந்தால், இப்போது அப்படிப்பட்டவர்களுக்குக் கடன் ரத்து செய்யப்பட்டு இருப்பதால், அந்தப் பணத்தை திருப்பித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக 42 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடன்கள், சிறிய விவசாயிகளுக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரத்து செய்யப்பட்ட பிறகு, மீண்டும் ஒரு அறிவிப்பை அரசு செய்தது. 1975 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின்னால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் வாங்கிய கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு திருப்பிச் செலுத்தி இருப்பார்களானால், பாதிக்கப்பட்டவர்கள் என்கிற பிரிவில் அப்படிப்பட்டவர்கள் வருவார்களானால், அவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்கப்பட்டு அந்தப் பணம் அடுத்த ஆண்டு அதாவது 1981-82 ஆம் ஆண்டு அவர்கள் பெறுகிற கூட்டுறவுக் கடன்களுக்குச் சரி செய்யப்படும் என்று சொல்லி அந்த நடைமுறையைக் கொண்டு வந்து இருக்கிறோம்.